2022 ஏப்ரல் 27]

துறைரீதியாக பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய அந்த பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, வரும் ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

அரண்மனையைப் புனரமைத்தல்

***3879—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *குளச்சல் தொகுதிக்குட்பட்ட இரணியல் அரண்மனையைப் புனரமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *இரணியல் அரண்மனையை 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புனரமைப்பதற்கு 2013–2014 ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்க காலதாமதம் ஏற்பட்டதன் காரணமாக, 2019 ஆம் ஆண்டு அதற்குரிய ஆணை வழங்கப்பட்டது. அந்த ஒப்பந்ததாரர் திருத்தணியைச் சேர்ந்தவர். கொரோனா நோய்த் தொற்றின் காரணமாக, முழு அடைப்பின் காரணமாக, அந்தப் பணியை அவரால் உடனடியாக மேற்கொள்ள முடியவில்லை. 31–9–2020 அன்று அந்தப் பணிகளை ஏற்றுக்கொண்டு, தொல்லியல் துறை நேரடியாகச் சென்று கள ஆய்வு செய்து, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு வணக்கத்தையும், வாழ்த்துகளையும் தெரிவித்து, அன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலக வரலாற்றில் ஒரு முக்கியமான பகுதி இரணியல். கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட, வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த அரண்மனை கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் புனரமைக்கப்பட்டதாகத் தகவல் உள்ளது. வீரநாடு அரசர், திருவனந்தபுரத்திலிருந்து ஆரல்வாய்மொழி வரை ஆண்ட அரசர் ஆவார். அதற்குத் தலைமையிடம் இரணியல். சேர, சோழ, பாண்டியர் என மூன்று அரசர்களுக்கு நிகரான தலைமைக்கும் ஒப்புக்கொள்ளக்கூடிய, ஏற்றுக்கொள்ளக்கூடிய, தலைமைத்துவம் வாய்ந்த ஓர் இடம் இரணியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரலாறு பற்றி பிறகு பேசலாம்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: வரலாறு சொல்லி, பராமரிப்பு பற்றி கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பராமரிப்பு குறித்து கேளுங்கள்.

முற்பகல் 11–25

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: 2013 ஆம் ஆண்டில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், என்னுடைய கோரிக்கையை ஏற்று, 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். Estimate போடுவதற்கு காலதாமதம் ஏற்பட்டதால் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. இப்போது சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நான் கேட்கிறேன், ஏன் இதை ஒதுக்கி வைத்தார்கள்? ஏன், இப்படிப்பட்ட நிலைமை அந்தப் பகுதிக்கு ஏற்பட்டிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அரண்மனை ஏன் **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள், ** என்றெல்லாம் சொல்ல வேண்டாம். இது கேள்வி நேரம். அந்த அரண்மனையைப் புனரமைப்பு செய்து தருவீர்களா என்று கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பத்மநாபபுரத்தில் கோட்டை. அதில் இன்றைக்கும் அரண்மனை இருக்கிறது. அது இன்று கேரள அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது. பத்மநாபபுரம் அரண்மனைக்கும், இரணியல் அரண்மனைக்கும் ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. எத்தனையோவிதமான மிக முக்கியமான அம்சங்கள் அங்கு இருக்கின்றன. ஆனால், வெளிப்படுத்தப்படவில்லை. இன்று எத்தனை கோடி ரூபாய் போட்டாலும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரின்ஸ் அவர்கள்தான் அதை வெளிப்படுத்த வேண்டும் என்று இருந்திருக்கிறது. இப்போது வெளிப்படுத்திவிட்டீர்கள். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் கேட்டுக்கொள்ளலாம்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *இல்லை, நான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்வையிட வேண்டும். இப்போது அங்கு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்கிறீர்கள். நிச்சயமாகச் சொல்கிறேன், அந்தப் பணிகள் சரியாக நடைபெறவில்லை. அந்த அரண்மனை எப்படி இருந்ததோ, எந்தவிதமாகக் கட்டப்பட்டதோ, எப்படி அலங்காரமாகக் கட்டப்பட்டதோ, எப்படிப்பட்ட சிற்ப வேலைகள் செய்யப்பட்டதோ, எப்படிப்பட்ட தேவைகள் நேர்த்தியாகச் செய்யப்பட்டதோ, என்னென்ன அடிப்படை வசதிகள் அங்கு இருந்ததோ அவை அத்தனையையும் செய்து, அந்த அரண்மனையை நீங்கள் உருவாக்கித் தந்தால் அது பெருமையாக இருக்கும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறமையானவர், சிறப்பாகச் செய்யக்கூடியவர், நான் மதிக்கக்கூடியவர் என்ற வகையில் நான் கேட்கிறேன். அந்த இடத்திற்கு நீங்கள் சென்று, அந்த அரண்மனையினுடைய வரலாற்றை மீண்டும் நீங்கள் பார்த்து, மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள், இன்னும் ஒரு கேள்வி கேட்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்ததைப் பற்றிக் கூறாமல், இனி நடப்பவை நல்லவைகளாக அமையட்டும் என்பதால்தான், அதில் உள்ளே செல்ல நான் விரும்பவில்லை. தற்போது அந்தப் பணிகள் இரண்டு பிரிவுகளாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 1,500 கன அடி மரங்களும், 2,000 தனி செங்கற்களும், சுண்ணாம்புக் கலவையும், கடுக்காய் போன்ற கட்டட உறுதித் தன்மைக்கு பொருத்தப்பட வேண்டிய பணிகளும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே சிதிலமடைந்திருந்த அந்தக் கூரைகளையெல்லாம் பத்திரமாக அகற்றும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு நிதியுதவி தேவைப்பட்டாலும் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் அதற்குப் போதிய நிதியுதவியை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். உங்கள் கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே நான்கு முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நேரடியாக வருகை தந்து, இதுபோன்ற ஆய்வுகளை மேற்கொண்டோம். அப்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து எங்கள் காதிலே ஒலித்திருந்தால், நேரடியாக அங்கு வந்திருப்போம். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் நேரடியாகக் கள ஆய்வுக்கு வருகிறோம். நாங்கள் பெற்ற ஆய்வு அறிக்கையின்படி, அடுத்த ஆண்டு மூன்றாவது மாத இறுதிக்குள் இந்தப் பணிகள் நிறைவுற்று, எப்போதும்போல் அந்த அரண்மனை புதுப் பொலிவு பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், எப்படி அந்த அரண்மனை இருந்ததோ அந்த மாதிரி செய்ய வேண்டும். உடனடியாக அதைக் கட்டி முடிப்பீர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லுங்கள்.

2022 ஏப்ரல் 27]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: இல்லை, இதில் நான் பேச வேண்டும். நான் அந்த அரண்மனைப் பகுதிக்குப் பல முறை சென்றிருக்கிறேன். அதில், வசந்த மண்டபம் என்று ஒன்று இருக்கிறது. அதில் இருக்கக்கூடிய அந்த monuments–ஐ பார்க்கும்போது garnial work–ஐப் பார்க்கும்போது புலியுடன் சண்டை போடுவது, யானையுடன் சண்டை போடுவது, Martial arts–தற்காப்புக் கலை, வாள் சண்டை, களரி சண்டை, வர்மக் கலைகள், வீர விளையாட்டு இவற்றைப் பார்க்கும்போது அது தமிழரின் கலை நயத்தையும், நாகரீகத்தையும், பண்பாட்டையும் காண்பிக்கிறது. ஆகவே, கீழடியில் எப்படி தமிழக அரசு அகழ்வாராய்ச்சி செய்கிறதோ அதைப்போல தொல்லியல் துறையிடம் இதைக் கொடுத்து, தமிழரின் பெருமையை மீட்கவும், இரணியல் அரண்மனையின் உண்மையான வரலாற்றை எதிர்கால மக்கள் தெரிந்து கொள்ளும் வகையிலேயும், உலகம் அறியக்கூடிய வகையிலேயும் தெரியப்படுத்த வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதிகமான நிதியை ஒதுக்குவதாகச் சொன்னீர்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை Museum ஆகக் கொண்டு வர வேண்டும். அதுதான் என்னுடைய கோரிக்கை. என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவீர்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழடி அகழாய்வைப் பொறுத்தளவில் பல்வேறு காலகட்டங்களில் அதற்கு இருந்த முட்டுக்கட்டை நிலையையெல்லாம் மாற்றி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதில் காட்டிய வேகத்தின் அடிப்படையில், ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த தமிழரின் பெருமை இன்றைக்கு தமிழ்நாட்டிலே நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன் தொல்லியல் துறை அலுவலர்களோடு நம்முடைய துறையின் செயலாளர், ஆணையர்களோடு நிச்சயம் அந்தப் பகுதிக்கு வந்து கள ஆய்வு செய்வோம். இன்னும் தேவைப்படும் கூடுதலான பராமரிப்புப் பணிகள் அல்லது பழமை மாறாமல் என்னென்ன நடவடிக்கைகள்

எடுக்கப்பட வேண்டுமோ அவற்றை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 11–30

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, 60 ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்ட 490 திருக்கோயில்களுக்கு சிறிய அளவு மானியமாக 17 இலட்சம் ரூபாயில் ஆரம்பித்து, 3 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. கடந்த முறை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பங்கேற்று, ஏற்கெனவே, திருவாங்கூர் தேவஸ்தானம், துறையின் சார்பில் பராமரிக்கப்பட்ட 490 திருக்கோயில்கள் கன்னியாகுமரிக்கு ஒப்படைக்கப்பட்ட பிறகு, அதற்குப் போதிய நிதி வசதி இல்லையென்பதைக் கருத்தில்கொண்டு—16 அடியிலிருந்து 30 அடி பாய்ச்சல் என்று சொல்வார்கள்; அந்தளவிலே, 30 அடி பாய்ச்சலில்—ரூ.3 கோடியை 6 கோடி ரூபாயாக உயர்த்தி, கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய திருக்கோயில்களைப் பாதுகாக்கின்ற காவலராக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டு, ஆராயப்பட்டு, நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மரியாதைக்குரிய எதிர்க்கட்சிக் கொறடா ஆகிய மூவரையும் வணங்குகிறேன்.

எனது வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலைப் பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற மாசாணியம்மன் திருக்கோயில் உள்ளது. அந்தத் திருக்கோயிலுக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பக்தகோடிகள் வந்து செல்கின்றார்கள். கோயிலுக்கு அருகில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடம் தனிநபரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்தைக் கையகப்படுத்தி, அந்தக் கோயிலுக்கு வருகின்ற

2022 ஏப்ரல் 27]

பக்தர்களுக்கு ஏதுவாக, கோயிலில் தங்கும் விடுதி கட்டுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாண்புமிகு தலைவர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இதுவரையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் வரலாற்றிலே இல்லாத அளவுக்கு இன்றையதினம் வரையில், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து ரூ.2,662 கோடி மதிப்பிலான இந்து சமய அறநிலையத் துறை சொத்துகளை மீட்ட ஆட்சி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த மாதம் அந்தத் திருக்கோயிலுக்கு நாங்கள் நேரடியாக ஆய்வுக்காக வந்திருந்தோம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் என்னைத் தொடர்புகொண்டு, 'நீங்கள் வருவதை எனக்குச் சொல்லவில்லையே!' என்று கேட்டார்கள். 'அந்த நிகழ்ச்சி நிரல், திடீரென்று இணைக்கப்பட்டது' என்று நான், அப்போது கருத்து தெரிவித்தேன். அந்தத் திருக்கோயிலுக்குத் தேவையான அனைத்துப் பணிகளும் செய்து தரப்படும். அந்தத் திருக்கோயிலுக்கு 2008 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டிருக்கிறது. ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற வேண்டிய திருப்பணிகள் மற்றும் குடமுழுக்குக் காலம் முடிந்துவிட்டது. இந்தச் சட்டமன்ற கூட்டத் தொடரில் துறையின் மானியக் கோரிக்கையில் அந்தத் திருக்கோயிலுக்குண்டான பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற இருக்கின்றன. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இருந்து கவனித்து, அந்த அறிவிப்பை மகிழ்ந்து, வரவேற்று, நன்றி சொல்ல வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 191, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]